[27th January 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள விவசாயிகள் சொன்னார்கள். அது நியாயமாகத் தோன்றுகிறது. அதற்குப் பின்னால்தான் அதைப் பற்றி மறுபரிசீலனை செய்யச் சொன்னேன். சட்டச் சிக்கலைப் பற்றி முடிவு தெரிந்ததும், அரசாங்கம் முடிவு செய்யும்.

Iron ores.

*** 71. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state the recommendations of the Japanese experts who have surveyed and examined the iron ores in the Kanjamalai area in Salem district ?**

இரும்புத் தாதுகள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சேலம் மாவட்ட கஞ்சமலைப் பகுதியிலுள்ள இரும்புத் தாதுகள் பற்றி ஆராய்ந்த ஜப்பானிய நிபுணர்கள் பரிந்துரைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஜப்பானிய நிபுணர்களின் பரிந்துரைகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

Prisoners released in 1969.

*** 72. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details containing the names, the native place, etc., of the prisoners who were released in 1969 on the birthday of the late Hon. Chief Minister, Thiru Annadurai ?**

1969-ம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்ட கைதிகள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

முன்னாள் முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்களின் பிறந்த நாளையொட்டி 1969-ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் பெயர், ஊர், ஆகிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சபை முன் ஓர் விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எத்திராஜுலு : காந்தி நூற்றாண்டு விழா சம்பந்தமாக எவ்வளவு பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

Industrial Estate, Sivaganga.

*** 73. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(*a*) whether all workshops in the Industrial Estate, Sivaganga are functioning ; and

(*b*) if not, the reason therefor ?

---

a Printed as Appendix II on pages 318–319.